# பறத்தல் சுகம்

காற்றில் சிறகசைத்து

நீருக்குள் பறந்து கொண்டிருந்ததந்த

நீர்ப்பறவை

சரேலென சிறகு குறுக்கி

நீருள் அம்பெனப் பாய்ந்து

மீள்கையில்

இரையுடன் இருபறவைகள்

எதிரெதிர்த் திசையில்

அச்சிறகுகள் கடப்பது

நீரா? நீரடி நிலமா?

வெளியா? திசையா?

அல்லது காலமா?

தத்துவ விசாரமேதுமற்ற

நித்ய பறத்தல்

எத்தனை இலகு

எத்தனை சுகம்

*

**சுயம்**

சுயம் ஒரு வளர்ப்புப் பிராணி

வெளியே செல்லும்போது

பூட்டிவிட்டுச் சென்றாலும்

தனியே அது

ஒரு சதுரத்துக்குள்ளாகவே

சர்வ சுதந்திரத்துடன் வட்டமிடுகிறது

கழுத்துச் சங்கிலியை ஆபரணமென

கர்வத்துடன் சுமந்து திரிகிறது

அவ்வப்போது மறவாது

காலை நாவால் வருடி கவனமீர்க்கும்

அதனிருப்பு

ஈன சுரத்தில் வாலாட்டும்போது

பிடரியில் ஆதுரமாய்த் தடவிவிட்டதும்

எளிதிலது சமாதானமடைந்துவிடுகிறது

அரிதான சந்தர்ப்பங்களில்

சங்கிலியைச் சற்று கழற்றிவிட்டு

சுயத்தை அழகு பார்க்கலாம்

யாரேனும் அருகில் வரும்பட்சத்தில்

அதை வாலாட்டப் பழக்கியிருந்தாலும்

மிகக்கவனமாக அதன்

சுயநினைவு வெளிப்படாதிருக்க

சங்கிலியிட்டதை சமனப்படுத்திவிடுகிறோம்

இப்படியான சார்புநிலைக் கண்ணிகளால்

கோக்கப்படுகிறது சொல்லப்படா

ஒரு சுயத்தின் சரிதம்

*

**சுயம்-2**

தனதற்ற ஒளியே வியக்கப்படுகிறது

தனதற்ற மொழியே போற்றப்படுகிறது

தனதற்ற பார்வையே பார்க்கப்படுகிறது

தனதற்ற பயணமே தொடரப்படுகிறது

தனதற்ற இலக்கே அடையப்படுகிறது

தனதற்ற எல்லாமே இங்கு

தனதென ஆன பின்பு

சுயம் இரவல்களின் கூட்டுதான்

சுயம் வெறும் கூடுதான்

உள்ளிலும் அது இல்லை

அதனுள்ளிலும் எதுவும் இல்லை

*

## மௌனக்கல்

மௌனக்கல்லின் கீழ்

படபடக்கும் தாள்களெனச் சொற்கள்

கல்லை லேசாக அசைக்கும் போதெல்லாம்

சொற்களைப் பறித்தோடிடும்

சூழ்நிலைக் காற்று

இறுகப்பிடித்த பண்டத்தை

வெடுக்கெனப் பறிகொடுத்த

குழந்தையின் கைகளைப்போல்

பிச்சித்தாயின் வெற்றுப் பிடிமானம்

சொற்களைப் பறிகொடுத்தபின்

கனமௌனம் காப்பது

வெறுமைதான்

*

## காலப்பிரதி

எந்தப் பெட்டகம் திறந்தாலும்

பழைய சட்டங்களுக்குள்

அந்தக்காலம் புன்னகையுடன்

அமர்ந்திருக்கும் சாத்தியமுண்டு!

கருப்பு வெளுப்பு பழுப்பென்று

காலத்தின் வண்ணச்சுவடுகள்!

மரபணுக்களின் தொடரோட்டத்தில்

நம் முன்னோடிகளின்

நினைவுப் படிமங்கள்!

கையில் வருடுடப்படும்

ஏதேனுமொன்று நெருடி

இதழ்க்கடை விரித்தோ

ஏக்கம் தரித்தோ

பெட்டிக்குள் மீளும்!

அவற்றைக் களைவதென்பது

அத்துணை எளிதாவதில்லை

இருக்கட்டுமே அவை…

கையில் பிடித்து வைக்கவியலா

அந்தக் காலத்தை

சிறிதேனும் சிறைபிடித்து

தேங்கிக் கிடக்கட்டும்

காலப்பிரதிகளாய்!

*

# கோடை வாடை

வெம்மைப் பகலில்

கிளையொடுங்கிய தென்றலும்

நம்மைப் போலவே காத்திருக்கிறது

அந்தி சாய

*

வராத காற்றைத் திட்டி

புரண்டு படுத்தான்

முனகியது

மரக்கட்டில்

*

வெய்யில் பொழியும் வேனிற்பகல்

உடலெங்கும்

உப்பு நட்சத்திரங்கள்

*

## ஜீவகாருண்யம்

எறும்புகள் சில சமயம்

அனுமதியின்றி ஆடைக்குள் நுழைந்து

குறும்புகள் செய்யும் வேளை

விரைவு ரயிலிலோ பேருந்திலோ

கைகள் கட்டப்பட்டு

கண்கள் வெட்கப்பட்டு

நெளியும் ஒருவித

நளின நாட்டிய அவஸ்தை

சில சமயம்

ஓய்வறை நோக்கி

ஓடுவதெல்லாம்

சிற்றெறும்புக்கும் பயந்துதான்

நெஞ்சைத் தொட்டு சொல்லுங்கள்

அப்போது நம்

ஜீவகாருண்ய நிலைப்பாடென்னவென்று?

*

## மண் பயனுற

நெகிழிப் பூக்கள் வேண்டாம்

நெடுவயலெங்கும் நஞ்சடிக்க வேண்டாம்

பூச்சிகள் நுகரா பழங்கள் வேண்டாம்

புகைக்கும் மனிதனும் ஆலையும் வேண்டாம்

அணுவைப் பிளந்த ஆற்றலும் வேண்டாம்

ஆற்றின் மணலில் அடுக்குமாடி வேண்டாம்

இம்மண் பயனுற மானுடா

நீயெதுவும் செய்ய வேண்டாம்

அப்படியும் உன் மனசாட்சி குத்தினால்

வட்டியேதும் வேண்டாம்

அசலை மட்டும் திருப்பு

நிழல்மரமொன்றின் விதையினை நட்டுப் போ

உரமென அதற்குன் உடலினை இட்டுப் போ

*